**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சீர்காழி**

**முன்னிலை : திரு. மா. சந்திரமோகன், பி.ஏ., பி.எல்.,**

மாவட்ட உரிமையியல் நீதிபதி, சீர்காழி

திருவள்ளுவர் ஆண்டு 2057 பராபவ வருடம் சித்திரைத் திங்கள் 02ம் நாள்

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15ம் நாள் புதன்கிழமை

*******

**அசல் வழக்கு எண். 284/2017**

**CNR.No.TNMY07-000449-2017**

1. கண்ணன்
2. பாலு
3. பன்னீர்செல்வம் ...வாதிகள்

....எதிர்...

பாலமுரளி ...பிரதிவாதி

(Plaint amended as per order in IA. 1660/2017, dated: 18.12.2017)

இவ்வழக்கு இந்நீதிமன்றத்தில் என்முன்பாக 10.04.2026 அன்று இறுதியாக விசாரணைக்கு எடுக்கப்பட்டு வாதிகள் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. A. ராம்குமார் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதி தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு. B. ரெங்கராஜு அவர்கள் ஆஜராகியும், இரு தரப்பு வாதுரை, ஆவணங்கள், சாட்சியங்களை பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்.

## தீர்ப்புரை

வழக்கு சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதியோ அவர்களை சார்ந்தவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரியும், செலவுத்தொகை கோரியும் இவ்வழக்கு வாதிகளால் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**1. வாதிகள் தரப்பு வழக்குரையின் சுருக்கம்**

**(1.1)** சீர்காழி தாலுக்கா, நாங்கூர் கிராமத்தில் அமைந்துள்ள வழக்கு சொத்து,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:14 +0530

நாங்கூர் அருள்மிகு புருஷோத்தமப்பெருமாள் ஆலயத்திற்கு சொந்தமானது என்றும், வழக்கு சொத்தினையும் இதர சொத்துக்களையும் வாதிகளின் தகப்பனார் கணபதி சாகுபடி செய்து வந்த குடும்ப பூர்வீக சொத்து என்றும், வாதிகளின் தகப்பனார் இறந்தபிறகு வழக்கு சொத்தினை 1ம் வாதி குத்தகைதாரர் என்ற முறையில் சாகுபடி செய்து வருவதாகவும்,

**(1.2)** வழக்கு சொத்திற்கும் இதர சொத்துக்களுக்கும் உண்டான குத்தகை பாக்கி சம்பந்தமாக மேற்படி திருக்கோயில் நிர்வாகத்தார் வாதிகள் மீது மயிலாடுதுறை ரெவினியூ கோர்ர்டில் P.No. 354 of 2012 என்ற வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும், மேற்படி வழக்கில் இடைக்கால உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும்,

**(1.3)** பிரதிவாதிக்கு வழக்கு சொத்திற்கு அருகாமையில் நிலங்கள் உள்ளதாகவும், அதன் காரணமாக வழக்கு சொத்தின் ஒரு பகுதியை உள்குத்தகைக்கு விடவேண்டும் என 1ம் வாதியை பிரதிவாதி கேட்டதாகவும், அதற்கு வாதிகள் மறுத்து விட்டதாகவும், இதனால் பிரதிவாதி வழக்கு சொத்தில் அத்துமீறி ஆக்ரமணம் செய்ய போவதாக கடந்த 28.07.2017 தேதி முதல் பகிரங்கமாக அச்சுறுத்தியதாகவும், கடந்த 31.07.2017ல் வழக்கறிஞர் மூலம் வாதிகள் கொடுத்த அறிவிப்பிற்கு பிரதிவாதி 30.08.2017ல் அவரது வழக்கறிஞர் மூலம் பதில் அறிவிப்பு கொடுத்ததாகவும்,

**(1.4)** மேற்படி பதில் அறிவிப்பில் வழக்கு சொத்தை பொறுத்து வாதிகளின் தகப்பனார் பிரதிவாதியின் தகப்பனாரிடம் பணம் வாங்கி கொண்டு விட்டதாக கூறுவதும் பொய் என்றும், பதில் அறிவிப்பில் கண்டுள்ள சர்வே எண்கள் விஸ்தீர்ணம் ஆகியவை தவறானவை என்றும், வழக்கு சொத்திற்கு நிவாரணம் மற்றும் காப்பீட்டு தொகை பெற்றதாக பிரதிவாதி கூறுவதும் உண்மையல்ல என்றும்,

**(1.5)** மேலும், பிரதிவாதி வழக்கு சொத்தில் ஆக்ரமனம் செய்ய போவதாக



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:20 +0530

கடந்த 23.10.2017 அன்று மீண்டும் அச்சுறுத்தியதாகவும், எனவேதான் இஞ்சங்ஷன் பரிகாரம் கோரப்பட்டுள்ளதாகவும் வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. <u>பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட எதிர்வழக்குரையின் சுருக்கம்.</u>

**(2.1)** வாதிகள் வழக்கில் கூறியுள்ள வழக்கு சொத்து விபரம், அதன் சர்வே எண், விஸ்தீரணம், வகைபாடு அனைத்தும் தவறு என்றும், வழக்குச் சொத்து அருள்மிகு புருஷோத்தமப்பெருமாள் ஆலயத்திற்கு சொந்தமானது என்பது உண்மை என்றும்,

**(2.2)** வாதிகளின் தகப்பனார் கண்ணன் த/பெ. கணபதி 27.07.2005 அன்று பிரதிவாதி தகப்பனார் கோவிந்தராஜன் த/பெ. நடேசமுதலியார் அவர்களுக்கு ஒரு நஞ்சை நில அனுபோக சாகுபடி பாத்திய உரிமை பத்திரம் மூலம் கீழ்கண்ட நஞ்சை நிலத்தின் அனுபோக சாகுபடி பாத்தியத்திற்கு ரூ.50,000/-(ரூபாய் ஐம்பதாயிரம்) ரொக்கமாக பெற்றுக் கொண்டு கீழ்கண்ட நஞ்சை நிலத்தின் சாகுபடி பாத்திய உரிமையும் வசத்தையும் திரு.கோவிந்தராஜனிடம் விட்டுவிட்டதாகவும்,

**(2.3)** அது முதல் பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜன் முதலியார் வசத்திலும் அனுபவத்திலும் கீழ்கண்ட நஞ்சை நிலம் இருந்து வந்ததாகவும், கோவிந்தராஜன் இறந்த பிறகு, பிரதிவாதியானவர், கீழ்கண்ட நஞ்சை நிலத்தை இதுநாள் வரை சாகுபடி செய்து ஸ்ரீ புருஷோத்தமப்பெருமாள் ஆலயத்திற்கு வாதிகள் பெயரில் குத்தகை செலுத்தி வருகிறார் என்றும், ஆனால் வாதிகள் எந்தவித குத்தகை தொகையும் செலுத்தவில்லை என்றும்,

**(2.4)** வாதிகள் கீழ்கண்ட நஞ்சை நிலத்தை குத்தகை சாகுபடி செய்யவில்லை என்றும், கோவிலுக்கும் தங்கள் பெயரில் குத்தகை தொகை செலுத்தவில்லை என்றும், வழக்கு தாக்கல் செய்ய வியாஜ்ஜிய மூலம் வாதிகளுக்கு எதுவும் எந்த தேதியிலும் கிடையாது என்றும், பிரதிவாதி



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:25 +0530

28.07.2017 அன்று கீழ்கண்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய போவதாக கூறியுள்ளதும் பொய் என்றும்,

**(2.5)** கீழ்கண்ட சொத்தின் மீது குத்தகை பாக்கி சம்மந்தமாக திருக்கோவில் நிர்வாகம் வாதிகள் மீது மயிலாடுதுறை ரெவின்யூ கோர்ட்டில் P.No.354/2012 போட்ட காரணம் வாதிகளின் தகப்பனார் பெயரில் பழைய RTR பதிவு படிவம் கோவில் அலுவலகத்தில் பழைய ஆவணபடி வாதிகளின் தகப்பனார் கணபதி பெயர் உள்ளதால் ஏற்பட்டது என்றும்,

**(2.6)** வாதிகளின் தகப்பனார் கீழ்கண்ட நஞ்சை நிலத்தின் RTR பதிவை பிரதிவாதியின் தகப்பனார் பெயரில் மாற்றி தருவதாக கூறி 27.07.2005 ஆவணத்தில் குறிப்பிட்டுள்ளார் என்றும், ஆனால் மாற்றி தரவில்லை என்றும், இதை அனுகூலமாக பயன்படுத்திக் கொண்ட வாதிகள், தங்கள் தகப்பனார் பெயரில் தவறான RTR பதிவை வைத்துக் கொண்டு தற்போது வாதிகள் சாகுபடிதாரர்கள் என்று கூறி பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும்,

**(2.7)** பிரதிவாதி தான் கீழ்கண்ட நஞ்சை நிலத்தை சாகுபடி செய்து வருகின்றார் என்றும், பிரதிவாதி தான் கோவில்களுக்கு குத்தகை பணமும், அரசாங்க கணக்கிலும், அரசாங்கம் வழங்கிய காப்பீடு தொகையும், நிவாரண தொகையும், கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றதும், அனைத்து ஆவணங்களும் பிரதிவாதியின் பெயரில் தான் கீழ்கண்ட நஞ்சை நிலத்திற்கு உள்ளது என்றும், பிரதிவாதி 28.07.2017 அல்லது 23.10.2017 அன்று ஆக்ரமணம் செய்ய போனார் என்பது பொய் என்றும்

**(2.8)** வாதிகளுக்கு கீழ்கண்ட சொத்தில் எந்தவித முன், பின் சாகுபடி உரிமை இல்லை என்றும், வாதிகள் பழைய மாற்றப்பட வேண்டிய ஆவணங்களை வைத்துக் கொண்டு அதன் அனுகூலங்களை பொய்யாக பெற இந்த வழக்கை, பிரதிவாதியின் பெயரில் தாக்கல் செய்து உள்ளதாகவும், எனவே,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:30 +0530

இவ்வழக்கை அதிக வேண்டும் செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டும் என்றும் எதிர்வழக்குரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**<u>எதிர்வழக்குரையில் குறிப்பிடப்பட்டுள்ள சொத்து விபரம்:</u>**

நாகப்பட்டினம் ரிஜிஸ்ட்ரேஷன் டிஸ்ட்ரிக், மயிலாடுதுறை பதிவு மாவட்டம், சீர்காழி சார்பதிவகத்தைச் சேர்ந்த, சீர்காழி தாலுக்கா, 81.நாங்கூர் வட்டம், நாங்கூர் கிராமத்தில் சொந்தமான்காடு நஞ்சை சர்வே எண்.190/1ல் 1 ஏக்கர் 17 சென்ட்

**<u>பழைய நான்கெல்லை:</u>**

பிள்ளையார்கோவில் நஞ்சைக்கும், ஜெயராமன் ஆசாரி சாகுபடி நஞ்சைக்கும் மேற்கு, புருஷோத்தமன் பெருமாள் கோவில் நஞ்சைக்கும், ச. செல்வராஜ் சாகுபடி நஞ்சைக்கும் வடக்கு, வரதராஜபெருமாள நஞ்சைக்கும், செல்வராஜ் சாகுபடி நஞ்சைக்கும் கிழக்கு, மேல் வாய்க்கால் வடி கன்னிக்கு தெற்கு இதற்குட்பட்டது.

**3. <u>இவ்வழக்கின் வழக்குரை மற்றும் எதிர்வழக்குரையை பரிசீலனை செய்து கீழ்க்கண்ட எழுவினாக்கள் தீர்வுக்காக வனையப்பட்டுள்ளன.</u>**

1. **தாவா சொத்து வாதிகளின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறதா?**
2. **வாதிகள் தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**
3. **தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?**

4. வாதிகள் தரப்பில் 1ம் வாதியான திரு. கண்ணன் என்பவர் **வா.சா.1** ஆகவும், திரு. சாரங்கபாணி என்பவர் **வா.சா.2** ஆகவும், சாட்சியம் அளித்துள்ளனர். வாதி தரப்பில் **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. பிரதிவாதி தரப்பில் பிரதிவாதியான திரு. பாலமுரளி என்பவர் **பி.சா.1** ஆகவும், திரு. லங்கேஷ்வரன் என்பவர் **பி.சா.2** ஆகவும், திரு. நடராஜன் என்பவர் **பி.சா.3** ஆகவும்,



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:35 +0530

திரு. சுந்தரய்யா, வழக்கறிஞர், நோட்டரி பப்ளிக் என்பவர் **பி.சா.4** ஆகவும் சாட்சியம் அளித்துள்ளனர். பிரதிவாதி தரப்பில் **பி.சா.ஆ.1** முதல் **பி.சா.ஆ.3** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**5. (i)** வாதிகள் தரப்பில் இவ்வழக்கினை அனுசரித்து வாதியான திரு. கண்ணன் வா.சா.1 ஆக சாட்சியம் அளித்து, அவர் மூலமாக 29.11.2016 தேதியிட்ட தாவாச் சொத்தையும் இதர சொத்துக்களையும் பொறுத்து வாதி பெயரில் வருவாய் நீதிமன்றம் மயிலாடுதுறையில் பி.நம்பர்.354/2012ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை **வா.சா.ஆ.1** ஆகவும், 02.03.2017 தேதியிட்ட தாவாச்சொத்தைப் பொறுத்து வாதி பெயரில் புருஷோத்தமபெருமாள் திருக்கோயிலில் வழங்கப்பட்ட பல்வகை ரசீதுகள் **(பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன்) வா.சா.ஆ.2** ஆகவும்,

**(ii)** 31.07.2017 தேதியிட்ட பிரதிவாதிக்கு வாதி தரப்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் **வா.சா.ஆ.3** ஆகவும், 30.08.2017 தேதியிட்ட பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு **வா.சா.ஆ.4** ஆகவும், 09.09.2020 தேதியிட்ட புருஷோத்தம பெருமாள் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா சார்பாக வாதிக்கு கொடுத்த அறிவிப்பின் அஞ்சலக உறையுடன் கூடிய சார்வு செய்யப்பட்ட நகல் **வா.சா.ஆ.5** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.

**(iii)** பிரதிவாதி தரப்பில் 29.08.2017 தேதியிட்ட தாவா சொத்தை பிரதிவாதி சாகுபடி செய்து வருவதற்கான வட்டாச்சியர் வழங்கிய அடங்கலின் உண்மை நகல் **பி.சா.ஆ.1** ஆகவும், 29.08.2017 தேதியிட்ட தாவா 1–வது அயிட்ட சொத்தை பொறுத்து வட்டாச்சியர் வழங்கிய சிட்டாவின் உண்மை நகல் **பி.சா.ஆ.2** ஆகவும், 14.10.2023 தேதியிட்ட பிரதிவாதி சேமிப்பு வங்கி கணக்கின் இணையவழி கணக்கு பட்டியல் **பி.சா.ஆ.3** ஆகவும் சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:41 +0530

6. <u>வாதிகள் தரப்பு வாதம்</u>: **வாதிகள் தரப்பில் ஆஜரான** கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்து நாங்கூரைச் சேர்ந்த அ/மி. புருஷோத்தமபெருமாள் கோயிலுக்கு சொந்தமானது என்றும், தாவா சொத்து 3 அயிட்டங்களாக உள்ளது என்றும், தனித்தனியான நான்கெல்லை கிடையாது என்றும், தாவா சொத்தில் வாதிகளின் தகப்பனார் திரு. கணபதி என்பவர் சாகுபடி செய்து கோயிலுக்கு செலுத்திவந்தும், அவருக்கு பிறகு அவரது வாரிசுகளான இந்த வாதிகள் தாவா சொத்தை குத்தகைதாரர் என்ற அடிப்படையில் சாகுபடி செய்து வருவதாகவும்,

**(6.1)** அவ்வாறு குத்தகைக்கு இருக்கும்போது, குத்தகை பாக்கி செலுத்தவில்லை என்று, மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்தில் கோயிலார் சார்பில் வழக்கு எண்.354/2012 தாக்கல் செய்யப்பட்டு, அதன்பேரில் பாக்கித்தொகை கொடுக்க வேண்டும் என்று வாதிகளுக்கு எதிராக உத்தரவிடப்பட்டும், அதன்பிறகு வாதிகள் மேற்படி குத்தகை பாக்கியை செலுத்தி ரசீது பெற்றுள்ளதாகவும்,

**(6.2)** இந்த வழக்கின் பிரதிவாதி தாவா சொத்திற்கு அருகில் விவசாயம் செய்து வருவதாகவும், தாவா சொத்தையும் விவசாயம் செய்யவேண்டும் என்ற பேராசையில் தாவா சொத்தை உள்குத்தகைக்கு கேட்டதாகவும், அதனை வாதிகள் மறுத்துவிட்டார்கள் என்றும், அதன்பிறகு வாதிகள் தரப்பில் பிரதிவாதிக்கு வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டதாகவும், அதனை பெற்றுகொண்ட பிரதிவாதி தவறான சங்கதிகளை கொண்ட பதிலறிவிப்பினை அனுப்பியதாகவும்,

**(6.3)** தாவா சொத்தானது பிரதிவாதியின் வசம் எந்த காலத்திலும் இருந்ததில்லை என்றும், அவர் குத்தகை சாகுபடி செய்யவில்லை என்றும், அவ்வாறு குத்தகை சாகுபடி செய்திருந்தால் அதற்கான ஆவணங்களை தாக்கல் செய்திருப்பார் என்றும், தாவா சொத்தினை வாதிகளின் தகப்பனார் எந்த காலத்திலும் பிரதிவாதியின் தகப்பனாருக்கு குத்தகை சாகுபடி அனுபோக



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:46 +0530

உரிமையை மாற்றிக்கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்காக பிரதிவாதி தரப்பில் கற்பனையாக கூறப்பட்டுள்ளது என்றும்,

**(6.4)** மேற்படி வழக்கு நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில் இதே வாதிகளுக்கு கோயிலார் சார்பிலிருந்து குத்தகை பாக்கி கேட்டு அறிவிப்பு வந்ததாகவும், எனவே, தாவா சொத்து, வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் தான் இருந்து வருகிறது என்றும், மேற்கண்ட சங்கதிகளை உரிய சாட்சிய சான்றாவணங்கள் மூலம் வாதிகள் தரப்பில் நிரூபித்துள்ளதால், வாதிகள் கோரியவாறு தீர்ப்பாணை செய்ய வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

7. **பிரதிவாதி தரப்பு வாதம்: பிரதிவாதி தரப்பில் ஆஜரான** கற்றறிந்த வழக்கறிஞர் தாவா சொத்து வாதிகளின் வசம் என்றுமே இருந்ததில்லை என்றும், வாதிகளின் தகப்பனார் கணபதி கடந்த 27.07.2005 அன்று, இந்த பிரதிவாதியின் தகப்பனாரான கோவிந்தராஜனிடம் ஒரு நஞ்சை நில அனுபோக சாகுபடி பாத்திய உரிமை பத்திரம் எழுதி கொடுத்து, ரூ.50,000/- ரொக்கமாக பெற்றுக் கொண்டதாகவும், சாகுபடி உரிமையை கோவிந்தராஜன் வசம் விட்டுவிட்டதாகவும்,

**(7.1)** கடந்த 27.07.2005 முதல் பிரதிவாதியின் தகப்பனார் கோவிந்தராஜன் வசம் தாவா சொத்து இருந்து வந்ததாகவும், அவர் காலமான பிறகு, அவருடைய மகன் என்ற முறையில் இந்த பிரதிவாதி சாகுபடி செய்து, குத்தகையை வாதிகள் பெயரில் செலுத்தி வருவதாகவும், வாதிகள் எந்த காலத்திலும் சாகுபடி தொகையை செலுத்தவில்லை என்றும்,

**(7.2)** வாதிகள் மீது மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு எண்.354/2012 தாக்கல் செய்யப்பட்டதற்கான காரணம் வாதிகளின் தகப்பனார் பெயரில், பழைய RTR பதிவுப்படியும், கோயில் அலுவலகத்தின் பழைய ஆவணங்கள் படியும் வாதிகளின் தகப்பனார் பெயரில் உள்ளது என்பதாகும்.



CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:51 +0530

மற்றபடி வாதிகளுக்கும் தாவா சொத்துக்களுக்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றும், வாதிகளின் தகப்பனார் தாவா சொத்தின் RTR பதிவை பிரதிவாதியின் பெயரில் மாற்றித்தருவதாக கூறி மாற்றித்தரவில்லை என்றும், இதனை அனுகூலமாக பயன்படுத்திக்கொண்டு வாதிகள் தாங்கள் தான் சாகுபடிதாரர்கள் என பொய்யாக இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதாகவும்,

**(7.3)** தாவா சொத்திற்கு அரசாங்கம் வழங்கிய காப்பீட்டுத்தொகை, நிவாரணத்தொகை, கூட்டுறவு வங்கியில் கடன்பெற்ற அனைத்து ஆவணங்களும் பிரதிவாதி பெயரில் உள்ளதாகவும், வாதிகள் பொய்யான ஆவணங்களை தாக்கல் செய்துள்ளனர் என்றும், 2 மற்றும் 3ம் வாதிகள் இந்த வழக்கில் சாட்சியம் அளிக்கவில்லை என்றும், முதல் வாதி சாட்சியத்தை 2,3 வாதிகள் ஒத்துரைப்பு (Corroboration) செய்து சாட்சியம் அளித்திருக்க வேண்டும் என்றும்,

**(7.4)** 3ம் வாதி பன்னீர் செல்வம் காலமாகிவிட்டார் என்றும், அவருக்கு வாரிசுகள் உள்ளனர் என்பதை வா.சா.1 தனது சாட்சியத்தில் ஒத்துக்கொண்டுள்ளார் என்றும், ஆனால் அவர்களை இந்த வழக்கில் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றும், இந்த வழக்கில் வருவாய் துறை மற்றும் கோவிலாரை வாதிகள் தரப்பில் விசாரிக்கவில்லை என்றும், வழக்கு மூல தேதியில்தான் வழக்கு எழுந்தது என்பதை வாதிகள் தரப்பில் நிரூபணம் செய்யவில்லை என்றும்,

**(7.5)** வாதிகளின் வழக்கு சொத்துக்களில் வாதிகளின் அனுபவம் நிரூபிக்கவில்லை என்றும், தாவா சொத்திற்கான நான்கெல்லை குறிப்பிடப்படவில்லை என்றும், வழக்கிற்கான ஆவணங்களான வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் வாதிகளும் கோவிலாரும் சேர்ந்து வஞ்சகக்கூட்டுடன் தயார் செய்யப்பட்டது என்றும், தாவா சொத்திற்கான அடையாளத்தை வாதிகள் தரப்பில் நிரூபிக்கவில்லை என்றும், எனவே



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:08:57 +0530

வாதிகளின் வழக்கை தள்ளுபடி செய்து உத்தரவிட வேண்டும் என்றும் வாதிடப்பட்டது.

**8. வாதிகள் தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் மற்றும் பிரதிவாதி தரப்பு கற்றறிந்த வழக்கறிஞர் வாதம் கேட்கப்பட்டது.**

9. இவ்வழக்கில் வாதிகள் மற்றும் பிரதிவாதி தரப்பு வாதுரை, வழக்கு ஆவணங்கள் மற்றும் சாட்சிகளை பரிசீலனை செய்து இவ்வழக்கில் வனையப்பட்ட எழுவினாக்களுக்கு இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு தீர்வு காண்கிறது.

**தீர்வு**

**10. எழுவினா –1**

**தாவா சொத்து வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறதா?**

**(10.1)** தாவா சொத்துக்களானது நாங்கூர் அ/மி. புருஷோத்தமபெருமாள் ஆலயத்திற்கு சொந்தமானது என்பது இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும். மேலும் தாவா சொத்துக்களை வாதிகளின் தகப்பனார் குத்தகைக்கு ஒப்புக்கொண்டு சாகுபடி செய்து வந்தார் என்பதும், இருதரப்பிலும் ஒப்புக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.

**(10.2)** தாவா சொத்துக்களை பொறுத்து வாதிகளின் தகப்பனாரான கணபதி பிரதிவாதியின் தகப்பனாரான கோவிந்தராஜனுக்கு கடந்த 27.07.2005ல் குத்தகை உரிமை அனுபவ மாற்று பத்திரம் எழுதிக்கொடுத்து தாவா சொத்துக்களின் அனுபவத்தை பிரதிவாதியின் தகப்பனாரான கோவிந்தராஜனிடம் விட்டுவிட்டார் என்று பிரதிவாதி தரப்பில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் அதனை நிரூபணம் செய்யும் வகையில் பிரதிவாதி தரப்பில் எவ்வித ஆவணமும் தாக்கல் செய்யப்படவில்லை.

**(10.3)** மாறாக மேற்படி குத்தகை சாகுபடி அனுபோக பாத்திய உரிமையானது, சீர்காழி வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக் திரு. சுந்தரய்யா அவர்கள்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:02 +0530

முன்பாக வாதிகளின் தகப்பனார் மற்றும் பிரதிவாதிகளின் தகப்பனாருக்கிடையே ஏற்பட்டது என பிரதிவாதி தரப்பில் கூறப்பட்டிருந்தாலும், அதற்கான ஆவணம் தாக்கல் செய்யவில்லை.

மேற்படி சீர்காழி வழக்கறிஞர்/நோட்டரி பப்ளிக் திரு. சுந்தரய்யா பிரதிவாதி தரப்பில் பி.சா.4 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் தனது முதல் விசாரணையில்,

> **"மேற்படி ஆவணத்தின் நோட்டரி சான்றிதழ் எண். 88/2005 ஆகும். ஆவணம் பதிவு செய்து 20 ஆண்டுகள் ஆகிறபடியால் பதிவேடு என்னால் தேடி கண்டுபிடிக்க இயலவில்லை"**

என்று கூறிவிட்டு, தனது குறுக்கு விசாரணையில்,

> **"எனக்கு நீதிமன்றத்திலிருந்து சாட்சியமளிக்க வந்த அழைப்பாணையில் ஆவண எண் ஏதும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். ஆனால் தேதியும், பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது."**

என்று சாட்சியமளித்துள்ளார்.

ஆவணம் பதிவு செய்து 20 ஆண்டுகள் ஆகிறபடியால் பதிவேடு என்னால் தேடி கண்டுபிடிக்கமுடியவில்லை என்று முதல் விசாரணையில் கூறிவிட்டு, ஆனால் குறுக்கு விசாரணையில், சாட்சியமளிக்க வந்த அழைப்பாணையில் ஆவண எண் குறிப்பிடப்படவில்லை என்றும், ஆனால் தேதியும், பெயரும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றும் சாட்சியம் அளித்துள்ளதை பரிசீலனை செய்யும்போது, பதிவேடே கிடைக்காதபோது, எதை வைத்து தேதியும், பெயரையும் வைத்து தன் முன்பாக சான்றுறுதி பெறப்பட்டது என்பது குறித்து தெளிவாக சாட்சியமளிக்காத காரணத்தால் பி.சா.4 சாட்சியமானது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது.

மேலும், வாதிகளின் தகப்பனாரிடமோ, அல்லது 1ம் வாதியிடமோ, குத்தகை சாகுபடி அனுபோக பாத்திய உரிமை மாற்று பத்திரம் ஏற்பட்டிருந்தாலும் கூட



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:07 +0530

ஏன் RTR பதிவையோ அல்லது கோயிலில் பகுதியின் பெயரையோ மாற்றிக்கொள்ள பிரதிவாதி தரப்பில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பது குறித்து பிரதிவாதி தரப்பில் எவ்வித விளக்கமும் இல்லை.

மேலும், தாவா சொத்திற்கான குத்தகை தொகையை அதன் உரிமையாளரான திருக்கோயிலுக்கு பிரதிவாதி செலுத்தி வருவதாக கூறியுள்ளபோதும், அதனை நிரூபணம் செய்யும் வகையில் எவ்வித ஆவணங்களும் பிரதிவாதி தரப்பில் தாக்கல் செய்யவில்லை.

**(10.4)** வாதிகளுக்கு எதிராக திருக்கோயில் சார்பில் மயிலாடுதுறை வருவாய் நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்து அந்த வழக்கில் தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களுக்குரிய குத்தகை பாக்கியை செலுத்த வேண்டும் என்று கடந்த 29.11.2016ல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது என்பதற்கு ஆதாரமாக வாதி தரப்பில் வா.சா.ஆ.1 ஆக மேற்படி உத்தரவு குறியீடு செய்யப்பட்டுள்ளது. வா.சா.ஆ.1 ஆவணத்தை கவனமாக பரிசீலனை செய்யும்போது, அந்த வழக்கு வாதிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரிய வருகிறது.

வா.சா.ஆ.1 ல் பிறப்பிக்கப்பட்ட உத்தரவின்படி தாவா சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களுக்குரிய குத்தகை பாக்கியை கடந்த 02.03.2017 அன்று வாதிகள் தரப்பில் செலுத்தியுள்ளனர் என்பதற்கு ஆதாரமாக குத்தகை செலுத்தப்பட்ட ரசீது வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்துக்களுக்கு வாதி பெயரில் பிரதிவாதி தான் குத்தகை செலுத்திவருவதாக பிரதிவாதி தரப்பில் கூறியிருந்தாலும், வா.சா.ஆ.2 ஐ பரிசீலனை செய்யும்போது, செலுத்துபவர்கள் கையெழுத்து என்ற இடத்தில் வாதிகள் 3 பேரும் கையெழுத்து செய்துள்ளனர். ஆனால் பிரதிவாதியின் கையெழுத்து அதில் இல்லை. இதிலிருந்து பிரதிவாதி தாவா சொத்திற்கான குத்தகையை செலுத்தவில்லை என்று தெளிவாக தெரிகிறது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:13 +0530

**(10.5)** பிரதிவாதி தரப்பில் தாவா சொத்தில் உள்ள தனது அனுபவத்தை நிரூபிக்கும் பொருட்டு அடங்கல் கணக்கு பி.வா.சா.ஆ.1 ஆவணமாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட ஆவணம் பிரதிவாதியின் செல்வாக்கால் தயார் செய்யப்பட்டது என்றும், மேற்படி ஆவணத்தின் தேதி கடந்த 28.08.2017 என்றும் ஆனால் இவ்வழக்கில் இடைக்கால உறுத்துக்கட்டளை மனுவானது கடந்த 26.07.2018ல் உத்தரவிடப்பட்டுள்ளது என்றும், மேற்கண்ட ஆவணம் உண்மையாக இருக்கும் பட்சத்தில் பிரதிவாதி தரப்பில் ஏன் இடைக்கால மனுவில் மேற்கண்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்று வாதி தரப்பில் வாதம் வைக்கப்பட்டது.

பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கவனமாக பரிசீலனை செய்யும்போது, அந்த ஆவணம் 29.08.2017ல் ஏற்பட்டுள்ளது. ஆனால் மேற்படி வழக்கில் தற்காலிக உறுத்துக்கட்டளை கோரும் மனுவான இ.ம.எண்.1450/2017ல் உத்தரவானது கடந்த 26.07.2018ல் ஏற்பட்டுள்ளது. அந்த மனுவில் மேற்கண்ட ஆவணம் பிரதிவாதி தரப்பில் குறியீடு செய்யவில்லை. மேற்படி இடைமனுவில் இந்த ஆவணத்தை பிரதிவாதி தரப்பில் ஏன் குறியீடு செய்யவில்லை என்பதற்கான நியாயமான விளக்கம் பிரதிவாதி தரப்பில் கூறவில்லை. எனவே, பிரதிவாதியின் செல்வாக்கால்தான் பி.வா.சா.ஆ.1 ஆவணம் ஏற்பட்டுள்ளது என்ற வாதியின் வாதம் ஏற்றுக்கொள்ளத்தக்கதாக உள்ளது.

தாவா சொத்திற்கு பிரதிவாதி தரப்பில் அரசாங்கம் வழங்கிய காப்பீட்டுத்தொகையும், நிவாரணத்தொகையும், கூட்டுறவு வங்கியில் கடன் பெற்றதும், அனைத்து ஆவணங்களும் பிரதிவாதி பெயரில் உள்ளது என்று பிரதிவாதி தரப்பில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது. அதற்கு ஆதாரமாக பி.வா.சா.ஆ.3 ஆவணமாக பிரதிவாதி சேமிப்பு வங்கி கணக்கின் இணையவழி கணக்கு பட்டியல் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த ஆவணத்தை கவனமாக பரிசீலனை செய்கையில் பணப்பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளது என்று



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:18 +0530

காண்பிக்கப்பட்டுள்ளது. ஆனால் அந்த பரிவர்த்தனைகள் தாவா சொத்திற்கு உண்டானதா என்பது குறித்து அந்த ஆவணத்தில் எவ்வித விளக்கமும் இல்லை. தாவா சொத்திற்கு தான் மேற்கண்ட பரிவர்த்தனைகள் நடைபெற்றுள்ளது என்பது குறித்து பிரதிவாதி தரப்பில் தெளிவாக நிரூபிக்கவில்லை.

**(10.6)** வாதிகள் தரப்பில் தங்களது கட்சியை நிரூபணம் செய்யும்பொருட்டு, முதலாவது வாதி வா.சா.1 ஆக சாட்சியம் அளித்துள்ளார். ஆனால் அவரது கட்சியை வலுவிழக்க செய்யும் வகையில் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்படவில்லை.

பிரதிவாதி தரப்பில் அவரது எதிர்வழக்குரையுடன் தாவா சொத்தில் சர்வே எண்.190/1க்கான நான்கெல்லை குறிப்பிடப்பட்டுள்ளது.

வா.சா.2 ஐ பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை செய்தபோது,

> **"பிள்ளையார் கோயில் நஞ்சைக்கும் ஜெயராமன் ஆசாரி சாகுபடி நஞ்சைக்கும் மேற்கு, புருஷோத்தமபெருமாள் நஞ்சைக்கும் செல்வராஜ் சாகுபடி நஞ்சைக்கும் வடக்கு, வரதராஜபெருமாள் நஞ்சைக்கும் செல்வராஜ் சாகுபடி நஞ்சைக்கும் கிழக்கு, மேலவாய்க்கால் வடிகண்ணிக்கு தெற்கு இந்த நான்கெல்லைக்கு உட்பட்ட நிலத்தை தான் பிரதிவாதி சாகுபடி செய்து வருகிறார் என்றால் சரியல்ல. 1ம் வாதி சாகுபடி செய்து வருகிறார்."**

என்று பிரதிவாதி குறிப்பிட்ட நான்கெல்லையின் 1ம் வாதிதான் சாகுபடி செய்து வருகிறார் என்று தெளிவாக சாட்சியமளித்துள்ளார்.

**(10.7)** பிரதிவாதி தரப்பில் அவரது கட்சியை நிரூபணம் செய்ய பி.சா.1 முதல் பி.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளனர். அவர்கள் தாவா சொத்தில் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளார் என்று சாட்சியமளித்துள்ளனர். ஆனால் வழக்கில் உள்ள ஆவணங்கள் பிரதிவாதியின் அனுபவத்தை நிரூபணம்



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:23 +0530

செய்வதற்கு போதுமானதாக இல்லை.

மேலும், வாதிகள் தரப்பில் தாவா வழக்கு நடைபெற்று கொண்டிருக்கும்போது, கோயிலார் சார்பில் தாவா சொத்துக்கள் உட்பட மற்ற சொத்துக்களுக்கும் குத்தகை பாக்கி கேட்டு, வழக்கறிஞர் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அந்த அறிவிப்பு வாதி தரப்பில் வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

மேற்கண்டவாறு வாதிகள் தரப்பில் அவர்களது அனுபவத்தை நிரூபணம் செய்யும் வகையில் வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்திருக்கும்போது, அதனை மறுத்து பிரதிவாதி தரப்பில் வாய்மொழி சாட்சியங்கள் கூறப்பட்டிருந்தாலும், ஆவண சாட்சியங்கள் ஏதும் இல்லை. மேலும் ஆவண சாட்சியங்களை வாய்மொழி சாட்சியங்கள் முரண்படுத்த முடியாது என்பதால் பிரதிவாதி தரப்பு சாட்சியங்கள் இந்த வழக்கிற்கு பொருத்தமானதாக இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

எனவே, மேற்கண்ட சாட்சிய சான்றாவணங்களை பரிசீலனை செய்யும்போது, தாவா சொத்தில் வாதிகளின் அனுபவம் நிரூபணம் செய்யப்பட்டுள்ளது என்பதால் தாவா சொத்து வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்று எழுவினா–1 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

<u>11.எழுவினா–2</u>

**வாதி தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா ?**

**(11.1)** தாவா சொத்தின் உரிமை மூலம், வழக்கு மூலம் மற்றும் அனுபவம் ஆகியவை நிரூபணம் செய்யவில்லை என்றும் வருவாய் துறையினரையோ, கோயிலாரையோ, சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றும் பிரதிவாதி தரப்பில் கட்சி எடுக்கப்பட்டுள்ளது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:31 +0530

தாவா சொத்தின் உரிமை மூலமானது கோயிலுக்கு சொந்தமானது என்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. தாவா சொத்தில் வழக்கு மூலம் எழுந்துள்ளது என்பதற்கு ஆதாரமாக வா.சா.ஆ.3 ஆவணமான வழக்கறிஞர் அறிவிப்பு குறியீடு செய்யப்பட்டுள்ளது. தாவா சொத்தில் வாதிகளுக்குள்ள அனுபவமானது வா.சா.ஆ.1, வா.சா.ஆ.2, வா.சா.ஆ.3 மற்றும் வா.சா.ஆ.5 மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளது.

தாவா சொத்தில் வாதிகளுக்கும், பிரதிவாதிக்கும் தான் தகராறே தவிர கோயிலாருக்கும் வாதிகளுக்கும் இல்லை என்பதாலும், இந்த வழக்கில் வருவாய் துறையினரை ஏன் விசாரிக்க வேண்டும் என்ற முகாந்திரம் பிரதிவாதி தரப்பில் காட்டப்படாததாலும், மேற்கண்ட பிரதிவாதியின் வாதமானது நிராகரிக்கப்படுகிறது. மேலும் வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆவணங்கள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டவை என்று பிரதிவாதி தரப்பில் கட்சி எடுக்கப்பட்டிருந்தாலும், அதை கோயிலாரை வைத்தோ, அல்லது வருவாய்துறையினரை வைத்தோ, அந்த ஆவணங்கள் தயார் செய்யப்பட்டவை என்பதை பிரதிவாதி தரப்பில் நிரூபணம் செய்யவில்லை.

**(11.2)** மேலும், எழுவினா எண்.1 ஆனது வாதிக்கு ஆதரவாக– தாவா சொத்து வாதியின் வசத்திலும் அனுபவத்திலும் இருந்து வருகிறது என்று தீர்வு காணப்பட்டுள்ள நிலையிலும், முதற்தோற்ற வழக்கு, வசதிக்கான சமநிலை ஆகியவற்றை வாதி நிரூபணம் செய்துள்ளதாலும், வாதி கோரிய பரிகாரம் வாதிக்கு வழங்காவிடில் ஈடு செய்ய முடியாத இழப்பு ஏற்படும் என்பதை வாதி நிரூபணம் செய்துள்ளதாலும், வாதி தாவாவில் கோரியுள்ள நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று எழுவினா–2 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.



CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:44 +0530

**12.எழுவினா–3**

**தரப்பினர்களுக்கு வேறு என்ன பரிகாரங்கள் கிடைக்கத்தக்கது?**

எழுவினா எண்.1 மற்றும் எழுவினா எண்.2ல் தரப்பினர்களுக்கு தேவையான அனைத்து தீர்வுகளும் காணப்பட்டிருப்பதால் தரப்பினர்களுக்கு கிடைக்கத்தக்க வேறு எந்த பரிகாரங்களும் இல்லை என்று எழுவினா–3 க்கு இந்நீதிமன்றம் விடை காண்கிறது.

**முடிவில்,** இவ்வழக்கானது அனுமதிக்கப்பட்டு, வழக்கு சொத்தை வாதிகள் அமைதியான முறையில் அனுபவிப்பதை பிரதிவாதியோ அவர்களை சார்ந்தவர்களோ எவ்விதத்திலும் இடையூறு செய்யக்கூடாதென நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு ஆதரவாக வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் குறிப்பெடுத்து, பின்னர் விரிவாக்கம் செய்யப்பட்டு, பின்னர் கணிப்பொறியில் நேரடியாகத் தட்டச்சு செய்யப்பட்டதை என்னால் சரிபார்க்கப்பட்டு பிழைத்திருத்தம் செய்யப்பட்டு 2026–ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 15–ம் நாள் என் கையொப்பம் இடப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:49 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

**பின் இணைப்பு**

**வாதிகள் தரப்பு சாட்சிகள்**

வா.சா.1 திரு. கண்ணன்

வா.சா.2 திரு. சாரங்கபாணி

**வாதிகள் தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 29.11.2016 | தாவாச் சொத்தையும் இதர சொத்துக்களையும் பொறுத்து வாதி பெயரில் வருவாய் நீதிமன்றம் மயிலாடுதுறையில் பி.நம்பர்.354/2012ல் பிறப்பிக்கப்பட்ட ஆணை |
| வா.சா.ஆ.2 | 02.03.2017 | தாவாச்சொத்தைப் பொறுத்து வாதி பெயரில் புருஷோத்தபெருமாள் திருக்கோயிலில் வழங்கப்பட்ட பல்வகை ரசீதுகள் (பிரதிவாதி தரப்பு ஆட்சேபனையுடன்) |
| வா.சா.ஆ.3 | 31.07.2017 | பிரதிவாதிக்கு வாதி தரப்பு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய அறிவிப்பின் அலுவலக நகல் |
| வா.சா.ஆ.4 | 30.08.2017 | வா.சா.ஆ.3க்கு பிரதிவாதி கொடுத்த பதில் அறிவிப்பு |
| வா.சா.ஆ.5 | 09.09.2020 | புருஷோத்தம பெருமாள் கோவிலின் பரம்பரை தர்மகர்த்தா சார்பாக வாதிக்கு கொடுத்த அறிவிப்பின் அஞ்சலக உறையுடன் கூடிய சார்வு செய்யப்பட்ட நகல் |

**<u>பிரதிவாதி தரப்பு சாட்சிகள்</u>**

பி.சா.1 திரு. பாலமுரளி (பிரதிவாதி)
பி.சா.2 திரு. லங்கேஷ்வரன்
பி.சா.3 திரு. நடராஜன்
பி.சா.4 திரு. சுந்தரய்யா, வழக்கறிஞர், நோட்டரி பப்ளிக்.

**<u>பிரதிவாதி தரப்பு சான்றாவணங்கள்</u>**

CHANDRAMOHAN M
Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:09:56 +0530

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 29.08.2017 | தாவா சொத்தை பிரதிவாதி சாகுபடி செய்து வருவதற்கான வட்டாச்சியர் வழங்கிய அடங்கலின் உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.2 | 29.08.2017 | தாவா 1–வது அயிட்ட சொத்தை பொறுத்து வட்டாச்சியர் வழங்கிய சிட்டாவின் உண்மை நகல் |
| பி.வா.சா.ஆ.3 | 06.01.2024 | பிரதிவாதி சேமிப்பு வங்கி கணக்கின் இணையவழி கணக்கு பட்டியல் |

CHANDRAMOHAN M

Digitally signed by CHANDRAMOHAN M
Date: 2026.04.15 19:10:02 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**சீர்காழி.**

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சீர்காழி

**நேரிய/வரைவு தீர்ப்புரை**
அசல் வழக்கு எண்.284/2017
நாள்.15.04.2026.